*பத்திரிக்கை வெளியீடு*
*Reserve Bank of India*

இந்திய ரிசர்வ் வங்கி
வெப்சைட் Website: www.rbi.org.in
இ மெயில் Email: helpdoc@rbi.org.in

தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
போன் Phone: 91 22 2266 0502

நவம்பர் 26, 2019

**கிருஷ்ணா பட்டானா சஹாகர் பாங்க் நியாமிதா, ஷாப்பூர், கர்நாடகா - அபராதம் விதிக்கப்பட்டது**

இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம், (கூட்டுறவு சங்கங்களுக்கு பொருந்தும்) இன் பிரிவு 47 A (1)(c) உடன் இணைந்த பிரிவு 46 (4) விதிகளின் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கிருஷ்ணா பட்டானா சஹாகர் பாங்க் நியாமிதா, ஷாப்பூர் வங்கிக்கு 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம் (ஏஏசிஎஸ்) இன் பிரிவு 27 (2) இன் கீழ் ரிடர்ன்களை சமர்ப்பிக்காததற்காக ரூ. 0.40 லட்சம் (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) பண அபராதம் விதித்துள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி, காரண விளக்க அறிவிப்பை வங்கிக்கு அனுப்பியிருந்தது. அதற்கு பதிலளிக்கும் விதமாக, வங்கி, தனிப்பட்ட விசாரணையைக் கோரியது. நிகழ்வின் உண்மைகளையும், இந்த விஷயத்தில் வங்கியின் பிரதிநிதித்துவத்தையும் பரிசீலித்த பின்னர், மேற்கூறிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டன மற்றும் பண அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு ரிசர்வ் வங்கி வந்தது.

**யோகேஷ் தயால்**
தலைமை பொது மேலாளர்

**பத்திரிக்கை வெளியீடு: 2019-2020/1266**